திரு. வி. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் மோர்தனா அணையைக் கட்டும் திட்டம் தொடங்கினால், அங்கே உள்ள நிலச் சொந்தக்காரர்களுக்கு வேறிடத்தில் விவசாயம் செய்ய அரசால் நிலம் வழங்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : துணைத் தலைவர் அவர்களே, பட்டா நிலமாக நமக்குத் தேவைப்படுவது 94.54 ஏக்கர்தான். வனத்துறையிலேயிருந்து நாம் பெற வேண்டியது 92.12 ஏக்கர். புறம்போக்கிலேயிருந்து நாம் எடுப்பது 96 ஏக்கர். எனவே இந்தப் பட்டா நிலத்திற்கு மட்டும்தான் ஒரு மாற்று ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். அந்த மாற்று ஏற்பாட்டை அரசு செய்யும்.

10-40 மணி

அமிர்தி அணை கட்டுதல்.

*4209 திரு. அ. இராசேந்திரன் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், போளூர் தொகுதியில் நாக நதியின் குறுக்கே அமிர்தி அணை கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அணை எப்போது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இத்திட்டம் குறித்த முதனிலை ஆய்வறிக்கையை (Preliminary Estimate) தலைமைப் பொறியாளர் (ஆய்வு), அரசுக்கு அனுப்பி, இத்திட்டத்தை விரிவாக ஆய்வு செய்ய அரசின் ஒப்புதலைக் கோரியுள்ளார். இத்திட்டம் விரிவாக ஆய்வு செய்தபின் பரிசீலித்து இவ்வணையைக் கட்டுவது குறித்து முடிவு செய்யும்.

1990 சனவரி, 27]

திரு. அ. இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமிர்தி அணையைக் கட்டுவதால், அங்கே பயன் அடையும் ஏக்கர் எவ்வளவு? அதனுடைய திட்ட மதிப்பீடு போன்றவைகள் எல்லாம் ஆராயப்பட்டுள்ளனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அணை கட்டினால், சுமார் 19 கிராமங்கள் பயன் அடையும். அந்த ஏரிகளுக்கு நீர் போகும். 3,309 ஏக்கர் பாசன வசதி பெறும். 570 ஏக்கர் பாசனப் பற்றாக்குறையிலிருந்து மீட்கப்படும். 4,176 டன் உணவு அதிகமாகக் கிடைக்கும்.

திரு. அ. இராசேந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கலைஞர் அவர்களுடைய அரசு எதிலும் ஒரு காலக்கெடுவை வைப்பதைப் போல, இந்தத் திட்டத்திற்கும் ஒரு காலக்கெடுவை வைத்து, அந்தக் காலக்கெடுவிற்குள் இந்த அணை கட்டி முடிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : துணைத் தலைவர் அவர்களே, காலக்கெடுவில்லை. விரைந்து செயல்படும்.

திரு. ஏ. கணேசமூர்த்தி: துணைத் தலைவர் அவர்களே, புதிது புதிதாக அணைகளைக் கட்டுகிற இந்த அரசு நீண்டகாலமாக வெட்டப்பட்டு, இதுவரையில் பாசனத்திற்கு விடப்படாமல் இருக்கிற பரம்பிக்குளம் ஆளியாறு கால்வாய்களுக்கு 3 ஜோன்களாக உள்ளதை, 4 ஜோன்களாக மாற்றி, தண்ணீர் விடுவதற்கு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: துணைத் தலைவர் அவர்களே, அமிர்தியிலிருந்து பரம்பிக்குளம் ஆளியாறு திட்டத்திற்கு கேள்வியைத் தொடுத்திருக்கிறார் மாண்புமிகு உறுப்பினர் திரு. கணேசமூர்த்தி அவர்கள். இருந்தாலும் நான் அவருக்கு விடையளிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். 3 ஜோன்களாக இருப்பதை, 4 ஜோன்களாக மாற்றவேண்டும், புதிய ஆயக்கட்டுகளுக்கு, அதாவது எக்ஸ்டன்சன் ஏரியாக்களுக்கு தண்ணீர் தரவேண்டும் என்பது அந்தப் பகுதியினுடைய நீண்டகாலக் கோரிக்கை. அதை இந்த அரசு உணர்ந்திருக்கிறது. இதைக் குறித்து அரசு ஒரு இறுதி முடிவை எடுப்பதற்காக, கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்திலும் கருத்து கேட்கப்பட்டது. பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமிருந்தும் கருத்து கேட்கப்பட்டது. இரண்டு மாவட்ட ஆட்சித் தலைவர்களும், தங்களது

அறிக்கையை அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதை இந்த அரசு 'கமிஷனர் பார்லேமெண்ட் அட்மினிஸ்ட்ரேசன்' அவர்களுக்கு அனுப்பி, அவருடைய கருத்தையும் கேட்டு இருக்கிறது. அது கிடைத்த பிறகு, அது குறித்து அரசு நடவடிக்கையை மேற்கொள்ளும்.

கோயில்பத்து கிராமத்தில் தொழிற்பேட்டை.

* 2607 திரு. பி. வி. இராஜேந்திரன் :

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வேதாரண்யம் தொகுதியில் கோயில்பத்து கிராமத்தில் தொழிற்பேட்டை அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. பி. வி. இராஜேந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிப்பதற்காக கூட்டப்பட்டு இருக்கின்ற இந்தக் கூட்டத் தொடரின் கடைசி நாளான இன்றைக்கு நான் சொல்ல விரும்புவது, மேதகு ஆளுநர் அவர்கள் தஞ்சை மாவட்டத்திற்கு வந்தபோது "10 லட்சம் விவசாயத் தொழிலாளர்களும் விவசாயிகளும், இன்றைக்கு வாடுவதைப் பார்க்கிறேன், அதிலும் குறிப்பாக, ஒருபோக சாகுபடி, குறுவை சாகுபடிக்கு 350 கோடி ரூபாய் அளவிற்கு இழப்பு ஏற்பட்டு இருப்பதை நான் உணர்கிறேன், தொடர்ந்து விவசாயத்தை நம்பியிருக்க முடியாது இந்த மாவட்டம்'' என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காக ஊரகத் தொழில் துறை வேறு ஏதேனும் திட்டங்களை கைவசம் வைத்திருக்கிறதா என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்விக்கு அரசின் பரிசீலனையில் இல்லை என்றுதான் சொன்னேனே ஒழிய, மாண்புமிகு உறுப்பினர் முன்வந்தால், அந்தப் பகுதியிலே தொழில்பேட்டை தொடங்